


கிராமம் எண்.116/1
சன்னாபுரம்

நகர் ஊரமைப்புத்துறை (DTCP) தஞ்சாவூர் மாவட்டம்

திருநாகேஸ்வரம் பேரூராட்சி

தஞ்சாவூர் மாவட்டம், குடமுருட்டி வட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி மற்றும் அணக்குடி திருநாகேஸ்வரம் கிராமம், நி.அ.எண்.171/1A-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுகளான மனைகள் அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

அளவு : 1அங்குலம் = 33அடி (1:400)

ON-LINE APPLICATION NO: FVTTLDHK/15035

குறிப்பு

மனைப்பிரிவின் பரப்பு : 1930.80 ச.மீ (அ) 2077.52 ச.அடி
சாலையின் பரப்பு : 4457.40 ச.அடி
மீதமுள்ள மனைப்பிரிவின் பரப்பு : 2077.52 ச.அடி - 4457.40 ச.அடி = 16317.12 ச.அடி
கோரிய மனைகள் : 12
ஒதுக்கிய மனைகள் : 12
மனைப்பிரிவின் எல்லை
நிலையிலுள்ள சாலை
பொறுப்புக்கு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

7.20 மீ அகல மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு - 4432.40 ச.அடி

மூலை முடக்கு பரப்பு

$\frac{5' \times 5'}{2} \times 2 = 25.00$ ச.அடி

மொத்த பரப்பு = 4457.40 ச.அடி

பொது உபயோகம் : 208.36 ச.அடி (1.33%)

தனிநபரி மிசைரு வரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

பிரிவோரு வரியம் : 208.36 ச.அடி (1.33%)

சாலை வரம்பு : 7.20மீ முதல் 12.0மீ வரையிலான சாலைக்கு 1.50மீ விட்டம் வேண்டும்

மூலை முடக்கு : 7.20மீ முதல் 12.0மீ வரையிலான சாலைக்கு 1.50 x 1.50மீ விட்டம் வேண்டும்

நிபந்தனைகள்

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இத்தினை எந்தத்தனையாலும் நில ஆழ்நிலை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்ற அறிய்ப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட்டாலும் குத்தகை ஒப்புதல் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நான் வாபஸ் இல்லாமல் அவர்களால் ரத்து செய்யப்படும்.
3. விற்பனைக்குரிய மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வனையின் நகலோடு நகர் வரையறுத்தலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விற்பனைரீதி மனைப்பிரிவு நகலுவையிலில் 6' X 4' அளவிலான நிரந்தர நகல் பலகை முலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரதர்க்கப்பட வேண்டும்
5. The Tamil nadu Government in G O Ms No 112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority.
6. அரசாணை எண்.18(டீ)16 நகர் நி(டீ).து ஆ துறை நாள். 04.02.2019 (அ) 31.01.2020-ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.
7. அரசாணை எண்.181 வீட்டு வசதி (டீ) நகராட்சி வளர்ச்சி(UD4(1)) துறை நாள்:09.12.2020-ன் படி உள்ளாட்சிகளை சார்ந்த பொது உபயோக தெருக்கள் மற்றும் தனிநபர் சேவை வரியத்திற்கான பொது உபயோக தெருக்கள் ஆகிய தானபத்திரம் ஆவண எண்.3464/2023 நாள் 16.10.2023 மற்றும் 3511/2023 நாள்.18.10.2023-ன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது
8. அரசாணை எண்.141 வீட்டு வசதி (டீ) நகராட்சி வளர்ச்சி(UD4(1)) துறை நாள்:16.07.2022
9. மனுதாரின் மனைப்பிரிவு நிலப்பகுதியில் புறம்போக்கு நிலமாக அமைவதால் அதில் அமைந்திருந்த பேரூராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ம. வ/நு. ஊ. உ. இ. எண்: SWP/ 62 /2023

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் வரையறுப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்

திருநாகேஸ்வரம் பேரூராட்சி
நகஎண்.-545/2023. நாள்.-11.1.2024

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர் அவர்களின் கடிதம் எண்.15035/2023/TDP-1 நாள்.-3.11.2023 மற்றும் மனுதாரர் மனு எண்.99/2023 நாள்.-29.12.2023 ன்படியும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்,
பேரூராட்சி அலுவலகம்,
திருநாகேஸ்வரம்-612 204

11 JAN 2024
தஞ்சாவூர் மாவட்டம்

11.1.2024

Signature valid
Signed by: Assistant Director
Location: Thanjavur
Date: 2024.01.03

CamScanner

திருநாகேஸ்வரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் பிறப்பிப்பவர் :: திருமதி. தீ. பங்கயற்செல்வி

ந.க.எண்: 545/2023 நாள்:11.01.2024

பொருள்: மனைப்பிரிவு – பேரூராட்சி நிர்வாகம் – தஞ்சாவூர் மாவட்டம் – திருநாகேஸ்வரம் பேரூராட்சி – சன்னாபுரம் கிராமம் புல எண். 171/1ஏ–ல் 20774.52 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் மனை எண். 1 முதல் 12 வரையுள்ள மனைகளுக்கு இறுதி ஒப்புதல் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் கடிதம் எண். 15035/2023/ TD4/2023/TCP நாள் 03.11.2023
2. துணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ம.வ./ந.ஊ.உ.இ/ SWP/62/2023
3. இவ்வலுவலக ந.க.எண்.545/29.12.2023
4. சார் பதிவாளர், திருவிடைமருதூர் அவர்களின் வழிகாட்டுதல்
5. திருநாகேஸ்வரம் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 99/29.12.2023.
6. திரு.க.வெங்கடேசன் என்பவர் உறுதிமொழி பத்திரம்
7. கும்பகோணம் பாரத மாநில வங்கி செ.கீ.எண். 20240111049737/ நாள்.11.01.2024.
8. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

****

உத்திரவு :-

தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட திருநாகேஸ்வரம் அனக்குடி கிராமம் நில அளவை எண். 171/1ஏ–ல் இல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் 20774.52 சதுரடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 12 வரையுள்ள மனைகளுக்கு பார்வை (1)இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கை கடிதம் எண்.15035/2023/ TD4/2023/TCP நாள் 03.11.2023இன்படி தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு மேற்படி ஆணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தஞ்சாவூர் மண்டலம், நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடம் ம.வ/ந.ஊ.உ .இ SWP/62/ 2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி பேரூராட்சி இறுதி ஒப்புதல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை (5) காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 99 நாள்.29.12.2023ன்படி மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி உத்தரவில் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி நிலப்பயன் மாற்றக் கட்டணம் மனை வழிகாட்டி மதிப்பில் 3 விழுக்காடு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதி கட்டணங்கள் இவ்வலுவலக செலுத்துச்சீட்டு எண்.570 நாள் 11.01.2023 இன்படி செலுத்தப்பட்டுள்ளது. எனவே கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் உத்தரவில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் மேற்படி மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

CamScanner

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து ஆவணங்களில் ஏதேனும் தவறுகளோ, வில்லங்க விவகாரமோ பின்னாளில் ஏற்படும் பட்சத்தில் இந்த மனைகள் ஒப்புதல் ஆணையானது, எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

2. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையின் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவின் நுழைவு வாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.

4. இந்த மனைப்பிரிவில் அமையும் நிலத்தின்மீது எவ்வித நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்க்கப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்தசட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் மனுதாரரால் உறுதி மொழி பத்திரம் எழுதி கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு மேற்கண்ட நடவடிக்கை நிலத்தின் மீது எடுக்கப்படும் பட்சத்தில் இந்த இறுதி ஒப்புதல் ஆணையானது எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

5. மனைகள், இறுதி ஒப்புதல் செய்யப்பட்ட பிறகு நகர் ஊரமைப்புத்துறையின் அனுமதியின்றி மனைகளை மாற்றியமைக்கவோ அல்லது மனைகளை பிரித்து விற்பனை செய்யவோ கூடாது.

6. இந்த மனைப்பிரிவுகளின் இறுதி ஒப்புதல் தொடர்பான தணிக்கை துறையில் ஆட்சேபனை ஏதேனும் எழுப்பப்படின் அதற்கான தீர்வுகளையும் மற்றும் தொகையினையும் மனுதாரரே செலுத்த வேண்டும்.

7. பொதுமக்கள் உபயோகித்திற்காக பூங்கா அமைத்துக் கொள்ள வேண்டி நன்கொடை ஆவணத்தின்படி பத்திர பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ள பூங்கா பகுதியினை நான்குபுறமும் தடுத்து சுற்றுச்சுவர் அமைத்து பூங்கா பகுதியென பெயர் பலகை நிறுவி, இப்பூங்கா பேரூராட்சிக்கு சொந்தமானது என குறிப்பிடப்பட வேண்டும்

(i) மனுதாரர் அளித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது. இப்பொருள் குறித்து மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் உண்மைக்கு புறம்பானது என்றோ, விதிமுறைகளை மீறியுள்ளது என்றோ பின்னிட்டு கண்டறியப்படின் இவ்வாணையினை மறு அறிவிப்பின்றி செயல் அலுவலரால் இரத்து செய்யப்படுவதுடன் மனைப்பிரிவு அங்கீகாரம் தானாகவே இரத்து ஆகிவிடும்.

CamScanner

(II) இம்மனையில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் இதற்குரிய கட்டிட உரிமம்/அனுமதியினை உரிய கட்டணம் மற்றும் காலியிடவரி ஆகியவற்றை தனியே பேரூராட்சியில் செலுத்தி பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் தெருவிளக்கு அமைப்பதற்கு மின்சார வாரியத்தின் மதிப்பீட்டின் படியான தொகையினை மனைதாரரால் செயல்அலுவலர், பேரூராட்சி என செலுத்தி உரிய தெருமின்விளக்குகள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேற்க்கண்ட நிபந்தனைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். தவறினால் இம்மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் செல்லுபடியாகாது.

மேற்க்கண்ட மனைப்பிரிவில் சாகுபடி நிலம் மற்றும் பாசன வடிகால்கள் தொடர்பான ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் இவ்வாணை ரத்து செய்யப்படும்.

செயல் அலுவலர்,
திருநாகேஸ்வரம் பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்.
11.1.2024

11.1.2024

பெறுதல்

திரு. க.வெங்கடேசன், குடியானத்தெரு, சன்னாநல்லூர் திருநாகேஸ்வரம்.

நகல் : 1. நகர் ஊரமைப்பு துணை, இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம், 33 ராஜப்பா நகர் 4 வது தெரு, மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்.
2. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருவிடைமருதூர்

CamScanner